*கவனிக்க.-* 13.06.2025 ஆந் திகதிய 2441 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழி மூலம்) மற்றும் IV (அ) (தமிழ் மொழி மூலம்) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.



# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2442 - 2025 ජූනි මස 20 වැනි සිකුරාදා - 2025.06.20**

2442 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி



| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 570 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |

| | பக்கம் |
|---|---|
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, யூலை மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2025, யூன் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டி கோரள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**யாழ்ப்பாணம் மாநகர சபை**

**மாநகர சபை அதிகார எல்லைக்குள் பொது வீதிகளுக்கு சேதங்களை ஏற்படுத்தலை மற்றும் அவ்வீதிகளில் போக்குவரத்துக்குத் தடைகளை ஏற்படுத்துவதைத் தவிர்த்தல், முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்புச் செய்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான நியமத்துணை விதிகள் கீழான அறிவித்தல்**

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு உரித்தான தத்துவங்களின் பிரகாரம் 2016.02.02 ஆம் திகதி வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் வெளியிடப்பட்டு வடக்கு மாகாண சபையில் அங்கீகரிக்கப்பட்ட நியமத் துணைவிதி அத்தியாயம் 3 இன் பகுதி 2 இற்கு அமைவாகவும் யாழ்ப்பாணம் மாநகரசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2024 ஆம் இலக்க 2017.06.16 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்களுக்கு அமைவாகவும், 2024.10.16 ஆம் திகதிய 10/10 மற்றும் 2025.05.09 ஆம் திகதிய 01/05 ஆம் இலக்க நிர்வாகக் கட்டளைகளுக்கு அமைவாக கீழ்கண்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கின்றேன்.

சந்திரன் கிருஷ்னேந்திரன்,
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
2025.05.14

**தீர்மானம்**

1. யாழ்ப்பாணம் நகரின் வீதிப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் வகையில், விக்டோரியா வீதியிலிருந்து வைரவர் கோவில் வீதி வரை உள்ள, C. பொன்னம்பலம் வீதி (மணிக்கூட்டு கோபுர வீதி) ஒரு வழிப் பாதையாக (உள்நுழைவது மட்டும்) நடைமுறைப்படுத்தப்படும்.

2. ஆஸ்பத்திரி வீதியில், கஸ்தூரியார் வீதி சந்தியிலிருந்து சத்திரத்துச்சந்தி வரையிலான பகுதியின் வீதியின் மத்தியில் கனரக வாகனங்களில் பொருட்களை ஏற்றி இறக்க இரவு 7.00 மணி முதல் காலை 6.00 மணி வரை மட்டும் அனுமதிக்கப்படும்.

06 - 133

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.